டிசம்பர் 2025
மலர் 24, இதழ் 3

சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

உன்னதத்திலிருந்து பெத்லகேம் வந்த அருணோதயம்

உன்னதத்திலிருந்து பெத்லகேம் வந்த அருணோதயம்

“எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே.... இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்;...” (மீகா. 5 : 2).

சாதாரண ஒரு மனிதன் இவ்வுலகத்தில் பிறப்பதற்கும் ஒரு தேவகுமாரன் பிறப்பதற்கும் அநேக வித்தியாசங்கள் உள்ளன. வேதாகமத்தை வாசித்தோமானால், பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகள் தான் அதிகமாக இடம் பெற்றிருக்கிறார்கள். ஆபிரகாம் ஆண்டவரை நோக்கி, **“... கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே...” (ஆதி 15 : 2)** என்றார். ஆபிரகாமுடைய நூறாவது வயதில் ஒரு ஆண் குழந்தையை (ஈசாக்கு) தேவன் கொடுத்தார். அதேபோல் ஈசாக்கு, மலடியாயிருந்த தன் மனைவிக்காக (ரெபெக்காள்) கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான் (ஆதி 25 : 21). ஈசாக்கின் அறுபதாவது வயதில் இரட்டை ஆண் பிள்ளைகளைக் கொடுத்தார். (ஏசா, யாக்கோபு) எல்க்கானாவின் மனைவியான அன்னாள் தனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று சீலோவிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்குச் சென்று **சேனைகளின் கர்த்தாவே ... உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன்... (1 சாமு 1 : 11)** என்று ஒரு பொருத்தனை பண்ணினாள். கர்த்தர் அருமையான ஒரு தீர்க்கனைக் (சாமுவேல்) கொடுத்தார். மூன்றாவது முற்பிதாவான யாக்கோபு கேட்காமலேயே பன்னிரண்டு ஆண் குழந்தைகளைத் தந்தார்.

பார்த்தீர்களா! கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் விண்ணப்பத்தை புறம்பே தள்ளிவிட்டு, கடந்து போகிற தகப்பன் அல்ல. எல்லோருடைய விண்ணப்பத்திற்கும் மன உருக்கமாய் இறங்கி, ஒரு அங்கீகாரம் தரும் பரிசுத்தமுள்ள சகாயர்; அதற்காகத்தான் மனிதனோடு உறவு கொண்டாடுவதற்கு பாலகனாய் வந்தார். ஜீவ அப்பமாக (யோவான் 6 : 48), ஜீவ தண்ணீராக (யோவான் 4: 10) வந்தவர், அப்பத்தின் வீடாகிய பெத்லகேமில் பிறந்தது மிகவும் பொருத்தமாகவும், போற்றுதலுக்கு உரியதாகவும், வரலாற்றுச் சான்றாகவும் அமைந்துள்ளது. கிறிஸ்துவினுடைய பிறப்பு அதிசயம் உள்ளதாகவும், ஆச்சரியமானதாகவும், மனிதனுடைய அறிவுக்கு எட்டாத உயரமாகவும் உள்ளது. பிதாவின் ஒரே பேரான குமாரனான கிறிஸ்து மனிதர்களாகிய நம்மிடம் எதை எதிர்பார்த்து பாலகனாகப் பிறந்தார் என்றால், அனைவரும் மனமாற்றம் அடைய வேண்டும் என்பதற்காக. பிறப்பு என்பது முக்கியமானதுதான். ஆனால், பிறப்பதின் ரகசியம் என்னவென்று பார்த்தால் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதை பிரதிபலிப்பதே.

கிறிஸ்துவின் பிறப்பில் இடைப்பட்டவர்கள் யார் யார்?

காபிரியேல் தூதன்: தேவ தூதர்கள் எல்லோரும் பரலோகத்தில் தேவனுக்கு முன்பாக இருப்பவர்கள். அவரவர்களுக்கு என்னென்ன வேலை கொடுக்கப்படுமோ அதை அவர்கள் செய்து முடிப்பார்கள். எல்லா தேவ தூதர்களுக்கும் முதன்மையானவர் காபிரியேல். கிறிஸ்துவின் பிறப்பில் காபிரியேல் மூன்று பேரை சந்திக்கிறார். சகரியா என்னும் ஆசாரியன். தாவீதின் குமாரனாகிய யோசேப்பு, நாசரேத் ஊரிலுள்ள மரியாள். மூன்று பேரிடமும் சொல்ல வேண்டிய காரியத்தை தேவன் காபிரியேலிடம் கூறி சரியான வேளை, சமயம் பார்த்து சொல்லுமாறு அனுப்பிவிடுகிறார். காபிரியேலுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு மிகவும் கடினமான காரியம். பொறுப்பாக, சிறப்பாக, தெளிவாக மூன்று பேரையும் சந்தித்து தேவன் கூறியவற்றை கூறிவிடுகிறார் தூதன்.

அகுஸ்துராயன் : ரோமப் பேரரசின் சக்கரவர்த்தி. ரோமர்களின் கட்டுப்பாட்டில் / வெற்றி பெற்ற

நாடுகளை மறுசீரமைக்கும் வேளையை முடித்திருந்தபடியால் ஒரு புதிய மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு உத்தரவு போட்டிருந்தான். இந்த கணக்கெடுப்பானது, சீரியாவிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாக இருந்த போது முடிவுற்றது. பேரரசரின் ஆணைப்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று தங்கள் பெயர்களை பதிவு செய்யப் புறப்பட்டனர்.

<u>ஏரோது ராஜா :</u> ரோமப் பேரரசின் தலைநகர் ரோமாபுரி. அந்நாட்டின் அதிபதி சீசர். எருசலேம் தேசத்தின் ராஜா ஏரோது என்று அழைக்கப்பட்டான். சாஸ்திரிகள் ஏரோதிடம் வந்து, யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்று கூறினவுடனே, ஏரோது கலங்கினான். தன்னைத் தவிர, யாரும் ராஜாவாகப் பிறக்கக் கூடாது என்று முடிவு எடுத்தான்.

<u>யோசேப்பு, மரியாள் :</u> யோசேப்பு... தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே.... யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான் (லூக் 2 : 4,5).

கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் ஊரைச் சேர்ந்தவர்கள் தான் யோசேப்பும், மரியாளும். எல்லோருமே அவரவர்கள் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தபடியால் நிறைமாத கர்ப்பினியான மரியாளுக்குத் துணையாக யாரையும் அழைத்துக் கொண்டு செல்ல முடியாத நிலையில் யோசேப்பு தவித்துக் கொண்டிருந்தார். யாரும் வழித்துணைக்கு வரமுடியாத சூழ்நிலையாக இருப்பதை அறிந்த யோசேப்பு தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட கர்ப்பவதியான மரியாளை அழைத்துக் கொண்டு புறப்படத் தயாரானார்.

<u>நட்சத்திரமும், சாஸ்திரிகளும்</u>

கீழை நாடுகளைச் சேர்ந்த சில சாஸ்திரிகள் கிழக்கிலே வழக்கத்திற்கு மாறாக, பிரகாசமான ஒரு நட்சத்திரம் உதிப்பதைக் கண்டனர். ஏதோ ஒரு மகாராஜா பிறந்திருக்கிறார் என்பதற்கு ஒரு அடையாளமாக எண்ணினர்; ஆகவே புறப்பட்டனர். எத்தனை மாதங்களுக்கு முன்னதாக நட்சத்திரத்தைக் கண்டார்கள் என்ற குறிப்பு எதுவும் இல்லை. எத்தனை மாதங்களாக சாஸ்திரிகள் பயணப்பட்டு வந்தார்கள் என்ற குறிப்பு எதுவும் இல்லை. சாதாரணமாக தினமும் சாஸ்திரிகள் பார்த்த நட்சத்திரத்திற்கும் இப்போது காணும் நட்சத்திரத்திற்கும் வித்தியாசம் காணப்பட்ட காரணத்தினாலும் யூதர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா தான் பிறந்திருக்கிறார் என்று கருதி எருசலேமுக்குச் சென்றனர்.

காரணம், அங்கேதான் அரண்மனை உள்ளது. ஏரோது ராஜா இருக்கிறார். மனிதனின் சாதாரண எண்ணப்படி அரண்மனையில் தான் யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருப்பார் என்று எண்ணிச் சென்றார்கள்.

<u>மண்ணோரைத் தேடி வந்த அருணோதயம்</u>

தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே நமக்கு இந்த இரட்சிப்பு சாத்தியமாயிற்று. அவர் தமது ஜனமாகிய இஸ்ரவேலை இரட்சிப்பதற்காகத் தமது குமாரனாகிய இயேசுவை மனுக்குலத்திற்கு ஒரு மீட்பைக் கொண்டுவர, உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயத்தை அனுப்பி வைத்தார்.

கிறிஸ்துவின் பிறப்பானது அநேக நற்குணங்களை நமக்கு முன்பாகக் காட்டுகிறது. யோசேப்பும் மரியாளும் தேவனை துணைக்கு அழைத்துக் கொண்டு பெத்லகேம் நோக்கிப் புறப்பட்டனர். யோசேப்பும், மரியாளும் சென்ற பாதையில் எத்தனையோ பேர் குடிமதிப்பு எழுதுவதற்கு நடந்து வந்திருப்பார்கள். பெரியதாக எந்த ஒரு உதவியும் அவர்களுக்கு செய்திருக்க வாய்ப்பில்லை. எல்லோரும் வேகவேகமாக எருசலேமை நோக்கி நடந்தார்கள். ஆனால், யோசேப்போ மரியாளை அழைத்துக் கொண்டு எத்தனை நாள் நடந்தாரோ தெரியவில்லை. சிறிது நேரம் மரியாளை கழுதையின் மீது அமர்த்தியும், சிறிது நேரம் கீழே அமரச் செய்தும், சிறிது நேரம் நடத்தியும் சிரமத்தினூடே பெத்லகேம் வந்து சேர்ந்தார்கள்.

சத்திரங்களின் நிலைமை

குடிமதிப்பானாது உலகமெங்கும் எழுதப்பட வேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் இருந்தது. ஆகவே, வழியில் இருக்கும் சத்திரங்களில் எல்லாம் தங்கி, உறங்கி அடுத்தநாள் தங்கள் பயணத்தைத் தொடங்க வேண்டிய கட்டாய நிலையில் இருந்தனர். எந்த சத்திரத்திலுமே இடம் இல்லாமல் மக்கள் அலைமோதிக் கொண்டிருந்தார்கள். இந்த சூழ்நிலையில் தான் பெத்லகேம் வந்த யோசேப்பும் மரியாளும் பெத்லகேமில் உள்ள சத்திரத்தில் இடம் தேடினார்கள். ஏற்கெனவே ஜனத்தொகையினால் சத்திரமானது நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆனாலும், யோசேப்புக்கும், மரியாளுக்கும் எப்படியாவது சத்திரத்தில் ஒரு சிறு இடம் கொடுத்து தங்குவதற்கு சத்திரக்காரன் பிரயாசப்பட்டான். இறுதியில் அவன் கண்களில் ஒரு இடம் தென்பட்டது. **அந்த இடம்தான் தேவனால் தெரிவு செய்யப்பட்ட இடம் என்று சத்திரக்காரனுக்குத் தெரியாது. காரணம் தொழுவத்தைத் தவிர, வேறே எந்த இடமும் காலியாக இல்லை.** தொழுவத்தை பரிசுத்தம் செய்து, யோசேப்பும், மரியாளும் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தான். பிறக்கப் போகும் குழந்தை எப்பேர்ப்பட்டக் குழந்தை, பரிசுத்த ஆவியினாலே உற்பவித்துப் பிறக்கப் போகிறது என்றும், தாழ்மையின் ரூபமாகக் காட்சி தரும் என்றும் சத்திரக்காரன் அறியாதிருந்தான்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், வெகுமதிகளும்:

...இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்... (தேவன் நம்மோடிருக்கிறார்) (மத்தேயு 1 : 23).

தேவனுடைய ஒரே பேரான குமாரன் இரவில் பிறந்ததற்கான காரணம் என்னவென்றால், குடிமதிப்பு எழுத வந்திருக்கும் மக்களுக்குள் எந்தவிதமான சலசலப்பும் ஏற்பட்டு விடக்கூடாது. ஜனங்கள் எல்லாம் ஒரே கூட்டமாகக் கூடினால், மரியாளுக்குக் கஷ்டமான சூழ்நிலை உருவாகிவிடும் என்று தேவன் தன் ஒரே பேரான குமாரனை இரவில் பிறக்கச் செய்திருக்கலாம்.

இரண்டாவதாக, குழந்தை பிறந்தவுடன் எங்கெல்லாம் காபிரியேல் தூதனை அனுப்பி, பிறப்பின் நற்செய்தியை அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், பகலிலே நற்செய்தி அறிவிக்கப்பட்டால், முக்கியமாக மேய்ப்பர்களால் வரமுடியாது; காரணம், ஆடுகளை விட்டுவிட்டு அவர்கள் வெளியே வந்தால் ரோமர்கள் கண்ணில் பட்டால் பிரச்சனையாகி, ஆடு மேய்க்கும் தொழில்கூட இல்லாமல் போய்விடும். ஆகவே, சர்வ லோகத்தையும் படைத்த எஜமானனான தேவன், இயேசுவை, இரவில் பிறக்கச் செய்தார்.

உலகில் உள்ள எல்லோருக்கும் விழிப்புணர்வு மிகவும் முக்கியமானது. புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளனின் வருகைக்கு ஆயத்தமாயிருந்தவர்கள், தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்; விழித்திருந்தார்கள். மணவாளனுக்காக விழித்திருந்து, காத்திருந்து, ஆயத்தமாயிருந்தபடியால் மணவாளனோடு கூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். அதேபோல் மேசியாவின் வருகைக்காக காத்திருந்த யூதர்களின் ஒரு பிரிவினரான மேய்ப்பர்கள் இரவெல்லாம் தூங்காமல் ஆடுகளைப் பராமரித்து, பாதுகாப்பாக, மற்ற கொடிய மிருகங்களிடமிருந்து பாதுகாக்க, ஆயத்தமாயிருந்த மேய்ப்பர்களுக்கே கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி முதலில் அறிவிக்கப்பட்டது.

இரவில் தேவதூதன் வந்து அறிவித்த உடனே, (லூக். 2 : 9-14) பரலோகத்திலிருந்த பரமசேனையின் திரள் ஒரு அருமையான பாடலைப் பாடிப் பிறந்திருக்கும் குழந்தையைக் குறித்துப் புகழாரம் சூட்டினார்கள்.

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக... என்று பாடி தேவதூதர்கள் ஆர்ப்பரித்தார்கள்.

விவிலியத்தில் எத்தனையோ பாடல்கள் கர்த்தரைப் போற்றி பாடப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. அத்தனை பாடல்களுக்கும் **மகுடம் சூட்டப்பட்டதுபோல் அமைந்தது, கிறிஸ்துவின் பிறப்பின் பாடல்.**

<u>கிறிஸ்து பிறந்தார் என்பதற்கு சாட்சிகள் :</u>

...மேய்ப்பர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, நாம் பெத்லகேம் ஊருக்குப் போய்.... இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள்.,. லூக். 2 : 15

கர்த்தர் பெத்லகேமில் பிறந்தார் என்ற நற்செய்தி மேய்ப்பர்களுக்குத்தான் முதன் முதலில் சொல்லப்பட்டது. அதேபோல் முதல் சாட்சியும் மேய்ப்பர்கள் தான். பெத்லகேமில் பிறந்த பாலகனாம் மேசியாவைக் காண மிகுந்த வாஞ்சையுடன் தங்கள் மந்தையை விட்டு, விட்டு மிக வேகத்துடன் குடிலை நோக்கி ஓடி வந்தார்கள்.

இரண்டாவது சாட்சி, குடிமதிப்பு எழுத வந்த ஜனக்கூட்டம். அவரவர்கள் உலகத்தை மீட்கப் பிறந்த ராஜாவுக்கு பணமாகவோ, ஆடைகளாகவோ, பொருட்களாகவோ கொடுத்திருக்கலாம்.

மூன்றாவது சாட்சி சாஸ்திரிகள் (Astromomers) வானத்தையும், அதில் தோன்றும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் குறித்து ஆராய்வதும், விண்ணிலே ஏதாவது மாற்றங்கள் தோன்றினால் அது ஏன் தோன்றியது, என்ன காரணம் என்று ஆராய்ச்சி செய்து, உண்மை நிலை என்னவென்று கண்டறிவார்கள். ஆண்டவர் பாலகனாக பெத்லகேமில் பிறந்த போது தோன்றிய (Star of Bethlehem) நட்சத்திரம் வான சாஸ்திரிகளை வழி நடத்தியது. பெத்லகேம் வந்த சாஸ்திரிகள், நேராக ஏரோதின் அரண்மனைக்கு வந்தனர். வானத்திலே தோன்றிய விசேஷ நட்சத்திரமானது, ஏரோதின் அரண்மனை வழியாக வந்தபடியால், ராஜாவானவர் அரண்மனையில் தான் பிறந்திருப்பார் என்று சாதாரண ஒரு மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் எண்ணத்தைப் போல் அங்கு பிறந்திருப்பார் என்று எண்ணி உள்ளே போயினர். சாஸ்திரிகள் ஏரோதுவிடம் கேட்ட கேள்வி.

“யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்த கொள்ள வந்தோம்” என்றார்கள் (மத். 2 : 2).

நன்றாக, பொறுமையாக, மேலே உள்ள வசனத்தை வாசியுங்கள். **“பிறந்திருக்கும் ராஜாவின் நட்சத்திரத்தைக் கண்டு”** என்று சாஸ்திரிகள் கூறியதைக் கேட்டதும் ஏரோது மட்டுமல்லாமல் எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். காரணம் ஒரு தேசத்துக்கு ஒரு ராஜா மட்டும் தான் இருக்க முடியும். **இரண்டு ராஜாக்கள் இருக்க வாய்ப்பே இல்லை.** அது சரிப்பட்டும் வராது.

ஏரோது எப்படிப்பட்டவன் என்பது சாஸ்திரிகளுக்குத் தெரியாது. ஆகவே, தேவனால் எச்சரிக்கை பண்ணப்பட்டார்கள். மொத்தம் எத்தனை சாஸ்திரிகள் அதிசய நட்சத்திரத்தைக் கண்டு புறப்பட்டனர் என்பதற்கு வேதாகமத்தில் எந்தச் சான்றுகளும் இல்லை. ஏரோதின் அரண்மனையை விட்டு வெளியே வந்ததும் மீண்டும் நட்சத்திரம் சாஸ்திரிகளை வழி நடத்தியது. நேராகப் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. அந்த நட்சத்திரத்தைக் கண்டு மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.

When they saw the STAR, they rejoiced with exceeding great joy.

நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் Star of Bethlehem போல் தேவன் தான் வழிகாட்டியாக இருக்கிறார், இருந்தார், இருப்பார். ஆகவே, கர்த்தர் சொல்லும் பாதையில் சாஸ்திரிகளைப் போல் நாமும், நடந்து, கடந்து வருவோமோனால் நாம் எதிர்பார்த்து வந்த காரியம் வெற்றிகரமாக நடக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சாஸ்திரிகள் நட்சத்திரம் காட்டின வீட்டிற்குள் பிரவேசித்து பிள்ளையையும், அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து

அதைப் பணிந்து கொண்டு தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூப வர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள் (மத். 2 : 11).

They had opened their treasures, they presented unto him gifts : Gold, Frankincense and Myrrh (Matthew. 2 : 11).

சாஸ்திரிகள் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப் போனார்கள்.

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். லூக் 2 : 52

"ஒளி/வெளிச்சம் என்றாலே இயேசு கிறிஸ்து தான். **நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் (யோவான் 12 : 46). உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது (ஏசா. 60 : 1). தேவன் ஒளியாயிருக்கிறார் ... (1 யோவான் 1 : 5). ஒளியை வஸ்திரமாக தரித்திருக்கிறீர்... (சங். 104 : 2).**

மேலே எழுதப்பட்டுள்ள வசனங்களைப் பாருங்கள். தேவன் முதன் முதலில் படைத்தது வெளிச்சம். ஒளி இல்லாவிட்டால் யாராலும் எதுவும் செய்ய முடியாது. இருளிலிருந்த மேய்ப்பர்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். ஒளியானது இருளை மறைத்து விடும் வல்லமை பொருந்தியது.

எத்தனை வருடங்களாக நாம் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து தியானிக்கிறோம். சிந்திக்கிறோம், குதூகலமாகக் காணப்படுகிறோம். ஆனால், கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு அறிவுறுத்துவது என்னவென்று அறிந்து, அதன்படி நடப்பதற்குத் தான் தேவாதி தேவன் தம்முடைய ஒரே பேரானக் குமாரனை பாலனாகப் பிறக்கச் செய்தார்.

கிறிஸ்துவின் பிறப்பானது நமக்கு கூறும் செய்திகள் என்ன?

... தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்... (லூக். 18 : 14).

தேவனுக்கு முன்பாக கிறிஸ்து இயேசுவுக்குள் நம் உள்ளத்தை / இருதயத்தை / ஆத்துமாவைத் தாழ்த்துவோமானால் ஆண்டவர் நமக்கு வரும் எப்பேர்ப்பட்ட சோதனையிலும் அவர் நியாயாதிபதியாக நின்று, சத்துருக்களுக்கு முன்னால் நம்மை உயர்த்துவார்.

நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்... சங். 32 : 8. சாஸ்திரிகள், மேய்ப்பர்கள், மற்றும் குடிமதிப்பு எழுத பயணம் செய்த அத்தனை மக்களோடும் இருந்து, செம்மையான வழியைக் காட்டின தேவன் நம்மையும் சரியான பாதையில் நாம் நடக்க உதவி செய்வார்.

பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார். (லூக். 2 : 51)

வாலிபப் பிள்ளைகளுக்கு பிடிக்காத ஒரு காரியம் கீழ்ப்படிதல். பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும். வேலையாள் எஜமானுக்குக் கீழ்ப்படிய வேண்டும். மாணவர்கள் குருவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இதோ நாமும் குடிமதிப்பு எழுத நம், நம் சொந்த ஊர்களுக்குச் சென்று நம் காரியத்தை முடித்து கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்டபடி, பெத்லகேம் சென்று இயேசு பாலகனை, உலக மீட்பரை, உலக, இரட்சகரை, யூத ராஜ சிங்கத்தை சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து கொள்வோமாக!

அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!!

– சகோதரி. பேர்ல் குயில்ராஜா

ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு சகோதர, சகோதரிகளுக்கு ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும் (ஏசா. 9 : 6).

பண்டிகையின் நாட்களில் நம்முடைய அனைவரது ஆசையும், எண்ணமும் புதிய ஆடை வாங்குவதிலும், சுவையான உணவை உண்பதிலுமே அதிக ஆவலாய் இருப்போம். இது தவறல்ல. ஆனாலும், நாம் மாத்திரமே மனமகிழ்ச்சியாயிருந்தால் அது சுயநலமாய் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவது போலாகும். பரலோக தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனையே இந்த உலகத்திற்கு கொடுத்திருக்க, அவருடைய பிள்ளைகளாகிய நாமும் இந்த உலகத்திற்கு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக, நம்மால் முடிந்த உதவிகளை பிறர்க்குச் செய்ய வேண்டும். நம்முடைய சொந்தங்களிலுள்ள ஏழ்மையானவர்களுக்கு, நாம் வசிக்கும் பகுதியிலுள்ள, சபைகளிலுள்ள திக்கற்ற பிள்ளைகளுக்கு, விதவைகளுக்கு மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள ஊழியர்களுக்கும் இந்த பண்டிகை நாட்களின் தேவைகளை நாம் சந்திக்க வேண்டும். வேதம் சொல்கிறது ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான், அதை அவர் அவனுக்கு திரும்பக் கொடுப்பார். மத்தேயு 25 : 40-இல் இயேசு சொல்கிறார், **மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.** பழைய ஏற்பாட்டிலுள்ள பத்து கற்பனைகளை, புதிய ஏற்பாட்டில் இரண்டு கற்பனைகளில் இயேசு அதை அடக்கி விட்டார். அதில் ஒரு கற்பனை **"உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல் பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக"** என்பது. மற்றவர்களுக்கு செய்யும் உதவிகள் மூலமாய் இந்த கற்பனையை நிறைவேற்றுவோமாக. டிசம்பர் மாதத்தில் மாத்திரமல்ல, வருடம் முழுவதும், கர்த்தர் நமக்கு அருளின ஆசீர்வாதங்களுக்குத் தக்கதாய் செய்வோமாக!

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஆடம்பரமான உடைகளை உடுத்தி, அனுதினமும் சுகபோகமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரன் இந்த ஐசுவரியவானின் வாசலருகே கிடந்து, அவனுடைய மேசையிலிருந்து விழும் உணவுகளால் தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். இருவரும், மரித்து ஐசுவரியவான் பாதாளத்திற்கும், லாசரு ஆபிரகாமின் மடிக்கும் கொண்டு போகப்பட்டார்கள். ஐசுவரியவான் செய்த பாவம் என்னவென்று வேதத்தில் வெளிப்படையாக சொல்லப்படவில்லை. ஆனால், அந்த ஐசுவரியவான், தான் சுகபோகமாய் வாழ்ந்த நாட்களில் ஏழைகளை விசாரிக்காததே அவனுக்கு பாவமாயிருந்திருக்கும்.

கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் இந்த நாட்களில் அவரின் அன்பை நம்முடைய கிரியைகளினால் இந்த உலகத்திற்கு வெளிக்காட்டுவதே அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதாகும்.

கடந்த செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரை சம்பல்புரி, முண்டாரி, கடபா, கோண்டா பொர்ஜா, குவி, சோரா மொழிபெயர்ப்பாளர்கள், ஒடிஷாவிலிருந்தும், போவி, சித்தி மொழிபெயர்ப்பாளர்கள் கர்நாடகா-விலிருந்தும், பாகேலி மொழிபெயர்ப்பாளர் மத்தியப்பிரதேசத்திலிருந்தும், டிங்கால் மொழி பெயர்ப்பாளர் ராஜஸ்தானிலிருந்தும், குடுக் மொழிபெயர்ப்பாளரும், மீண்டும் தெரிவு செய்யப்பட்ட ஹல்பி மொழிபெயர்ப்பாளர் செல்வி. பிரீத்தி நாக்கும், இருளா குஞ்சப்பனை மொழிபெயர்ப்பாளர் கோவை, காரமடையிலிருந்தும் வந்து தங்கள் மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்தும், சரிபார்ப்புப் பணியை ஒடிஷாவிலிருந்து வந்த திரு. ஐசக் மற்றும் திருமதி. கிரிஜா ஐசக் ஆகிய இருவரும் மேற்கொண்டார்கள். கடந்த அக்டோபர் 12-ஆம் தேதி கோவை, போத்தனூரிலுள்ள Vision Church of God சபையில் சகோ. ராஜகுமார் அவர்கள் தேவ செய்தியும், சகோ. கிதியோன் அவர்கள் IBT ஊழிய

விளக்கமும் கொடுத்தார்கள். சந்தர்ப்பமும், காணிக்கையும் கொடுத்த சபை போதகர், சபை மூப்பர்கள் மற்றும் பங்கு பெற்ற சபை விசுவாசிகள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

IBT மொழிபெயர்ப்புப் பணிகளை அந்தந்த மொழிபெயர்ப்பாளர்கள் துரிதமாகவும், அர்ப்பணிப்புடனும், திட்டமிட்டு செய்யவும், மிஷனெரிகள், முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் அவரவர் பணிகளை கர்த்தருக்குப் பயந்து செய்யவும் ஜெபியுங்கள்.

உங்கள் அனைவரின் நலனுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் நாங்கள் ஜெபித்து வருகிறோம். அவ்வண்ணமாகவே கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்,
K. ஜெய்சிங்

உலகச் செய்திகள்

★ பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ஜோயல் மோகிரி (79) பேராசிரியர் பீட்டர் ஹோவிட் (79) மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஃபிலிப் அகியோன் ஆகிய மூவருக்கும் அறிவிக்கப்பட்டது.

★ இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தம் : இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தத்தைக் கொண்டாடும் வகையில் எகிப்தின் ஷரம் அல்–ஷேக் நகரில் திங்கட்கிழமை (அக். 13) சர்வதேச அமைதி மாநாடு நடைபெற்றது.

★ வேதியியலுக்கான நோபல் பரிசு ஜப்பானைச் சேர்ந்த சுசுமு கிடகாவா, ஆஸ்திரேலிய விஞ்ஞானி ரிச்சர்ட் ராப்சன் மற்றும் அமெரிக்க விஞ்ஞானி ஓமர் எம். யாகி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலாவைச் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஹங்கேரி எழுத்தாளர் லஸ்ஸோவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ நியூயார்க்: அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளரான இந்திய வம்சாவளி இஸ்லாமியர் ஸோரான் மம்தானி (34) வெற்றி பெற்றார். சின்சினாட்டி நகர மேயராக இந்திய வம்சாவளி இஸ்லாமியரான அஃப்தாப் புரேவல் (43), விர்ஜீனியா மாகாண துணை ஆளுநர் தேர்தலிலும் இந்திய வம்சாவளி இஸ்லாமியரான கஜாலா ஹாஷ்மி (61) வெற்றி பெற்றார். விர்ஜீனியா மாகாண ஆளுநர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் அபிகாயில் ஸ்பான் பர்கர் புதிய ஆளுநராகவும், நியூஜெர்சி ஆளுநராக ஜனநாயக கட்சியைச் சேர்ந்த மிகி ஷெரில் வெற்றி பெற்றார்.

★ மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையை, ஆஸ்திரேலிய அணியைத் தோற்கடித்து, இந்திய மகளிர் அணி, வெற்றி வாகை சூடியது.

எமது தரிசனமும், எமது பணியும்

<u>எமது தரிசனம் :</u> “இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே”

<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் “ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை” அமைத்து அனுப்புதல்.

பணித்தளச் செய்திகள்

<u>மிஷனெரி : சகோ. ராமச்சந்திர நாக்</u>
<u>பணித்தளம் : போடோமசிகான் (ஒடிஷா)</u>

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

கடந்த மாதத்தில் மிஷனெரிப் பணிக்காக பட்டிகாம், மண்டகாட், பந்தாரிகுடா, திப்ரகுடா, பராமசி, சந்தோஷ்ப்பூர், ரஜோடா, சர்கிகுடா, கெல்லகுடா, அம்படாலா, நங்கநால், பேட்டல், கசுமிகுடா, பந்துகுடா, திகுடா, நன்பானி மற்றும் பக்தோரி ஆகிய கிராமங்களுக்குச் சென்றேன். இந்த கிராமங்களில் அநேக மக்களைச் சந்தித்து, நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகள் மற்றும் நற்செய்திப் புத்தகங்களை விநியோகித்தேன். கீழே குறிப்பிட்டுள்ளவர்களுக்காக ஜெபியுங்கள். இவர்கள் நற்செய்தியை வாஞ்சையுடன் கேட்பதால், இவர்கள் கர்த்தருக்குள் வளர வேண்டும். சகோ. பன்மாலி, நீலம், சுரேந்திரா, ராஜேந்திரா, ஈஸ்வர், கோபர்தார், கைலாஷ், தம்ரு, சுபேஷ், கம்லு, சன்சாய், ராஜேஷ்குமார், பிரதீப், பினோத், மகேந்திரா, பர்சு, குரு, ரபீந்திரா ஆகியோர்.

மிஷனெரிப் பணியில் ஞாயிறு ஆராதனை, போடோமசிகான் மற்றும் சீர்மாபாண்டி பணித்தள ஆலயங்களிலும், உபவாசக் கூடுகை மற்றும் வீட்டு ஜெபக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. பிரகாஷ் சித்தி</u>
<u>மொழி : சித்தி</u>
<u>பணித்தளம் : சித்தாப்பூர் (கர்நாடகா)</u>

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பகுதியில் லூக்கா அதிகாரம் 1 : 1-ஆம் வசனம் முதல் அதி. 23 : 56-ஆம் வசனம் வரையிலும், யோவான் அதி. 1 : 1 முதல் அதி. 21 : 25-ஆம் வசனம் வரையிலும், அப்போஸ்தலர் அதி. 1:1 முதல் அதி. 2 : 47-ஆம் வசனம் வரையிலும் மொழிசரிபார்ப்பு செய்யப்பட்டது. கடந்த செப்டம்பர் மாதத்தில் கோவை IBT-இல் ஒரு வாரம் நடந்த சரிபார்ப்புப் பணியிலும் மற்ற மொழிபெயர்ப்பாளர்களோடு கலந்து கொண்டேன். அதில் திருமதி. கிரிஜா ஐசக் அவர்கள் மூலமாக மொழிபெயர்ப்பு ஆலோசனைகளும், சரிபார்ப்பும் நடைபெற்றன. இம்மொழியிலும் புதிய ஏற்பாடு 2028-ஆம் ஆண்டு வெளியிட, IBT திட்டமிட்டுள்ளது. இப்பணி துரிதமாக முடிக்கப்பட BSI-லிருந்து ஒத்துழைப்பு கிடைக்கவும், இப்பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. G.N. சுந்தர்</u>
<u>பணித்தளம் : தஞ்சாவூர் & புதுக்கோட்டை (தமிழ்நாடு)</u>

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதம் முன்னேற்றப் பணிக்காக தஞ்சாவூரில் அய்யம் பேட்டை, பொன்நகர், LIC விரிவாக்கம், AC கார்டன், RHM காலனி, சர்ச் ரோடு, மங்களபுரம், பாலாஜி நகர், புதுக்கோட்டை ரோடு, மிஷன் 1 & 2 தெருக்கள், ராம்ஜீ நகர், 8 ஆபிரகாம் காலனி, ராம் நகர், கீரைக்காரத் தெரு, சன்னதி தெரு, பங்களா தெரு, கணபதி நகர், ஈஸ்வரி நகர், சின்னபாளையம், வடக்கு வாசல் ஆகிய இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து, IBT காணிக்கை பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். தஞ்சாவூர் முடித்தபின் புதுக்கோட்டைக்கு சென்று முன்னேற்றப் பணி செய்தேன். அங்கு சென்ற இடங்கள் : கணேஷ் நகர், வடக்குத் தெரு, பெக்ஸ்

நகர், ஐயன் குளம், சமந்தம் குளம், ஒத்தைத் தெரு, செல்லம்பாளையம், NGGO காலனி, தைல நகர், ஜீவா நகர் ஆகிய இடங்களில் IBT தாங்குநர்கள், பங்காளர்களைச் சந்தித்து, காணிக்கை பெற்று, ஜெபித்து வந்தேன்.

தஞ்சாவூரில் பல சபைகள் இணைந்து நடத்திய உபவாச ஜெபக்கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். என் முன்னேற்றப் பணிக்காகவும், என் உடல் சுகத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. கிறிஸ்துதான்</u>

<u>மொழி : தெஷியா</u>

<u>பணித்தளம் : பொண்டுகுடா (ஒடிஷா)</u>

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதத்தில் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பகுதியிலுள்ள 2 நாளாகமம் அதிகாரம் 1 முதல் அதிகாரம் 8 வரை கணினி-இல் கீ-இன் செய்தேன். சரிபார்ப்புப் பணியில் 1 சாமுவேல் 1-ஆம் அதிகாரம் முதல் 31-ஆம் அதிகாரம் வரையிலும், ஆகாய் 1 & 2 அதிகாரங்கள், பிரசங்கி 1-ஆம் அதிகாரம் முதல் 12-ஆம் அதிகாரம் வரையிலும், புலம்பல் அதி. 1 முதல் 5-ஆம் அதிகாரம் வரையிலும், நீதிமொழிகள் அதி. 1 முதல் அதி. 8 வரையிலும், எரேமியா அதி. 1 : 1 முதல், அதி. 20 : 18-ஆம் வசனம் வரையிலும் சரிபார்ப்புச் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கோவை IBT மையத்திற்குச் சென்று மொழிபெயர்ப்புச் சார்ந்த பணிகளை மற்ற 4 மொழி பெயர்ப்பாளர்களோடு இணைந்து செய்தேன். BSI Rev. Dr. N. சுப்ரமணி அவர்களிடம் சில ஆலோசனைகளைப் பெற்றேன்.

இதே மாதம் 19-ஆம் தேதியன்று என் தகப்பனார் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். குவாடி-யிலுள்ள மக்களுக்கு ஆலயம் இல்லை. இதற்காகவும் என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோதரி R. அனுராதா</u>

<u>மொழி : படுகா</u>

<u>பணித்தளம் : அரவங்காடு (நீலகிரி–தமிழ்நாடு)</u>

கடந்த மாதம் முழுவதும் கர்த்தரின் கிருபை இருந்ததற்காக அவரைத் துதிக்கிறேன்!

கடந்த மாதத்தில் நானும் சகோ. சந்திரனும் படுகா வேதாகமத்தில் புதிய ஏற்பாடு பகுதியில் மத்தேயு அதிகாரம் 1 முதல் 24 வரையிலும், NLT, FSV மற்றும் CL வேதாகமங்கள் உதவியோடு சரிபார்ப்பு செய்யப்பட்டது. வேதாகமம் முழுவதும் சரிபார்ப்பு முடிக்கப்பட்ட பிறகே மறு பதிப்பு செய்ய திட்டமிடப்பட்டு, அப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதுகுறித்து கலந்து ஆலோசிக்க, ஆகஸ்ட் மாதம் 13-ஆம் தேதியன்று Pr. முத்தன், Pr. ஆனந்தகுமாருடன் நாங்கள் இருவரும் கோவை IBT-மையத்திற்குச் சென்று ஆலோசனை செய்தோம். மேலும் 1000 பிரதிகள் அச்சிடவும், தேவையில் இருக்கும் படுகா மக்களுக்கு விநியோகிக்கவும், இப்பணியை ஒன்றரை ஆண்டுகளுக்குள் முடித்துக் கொடுக்கவும் ஒத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றன. இப்பணி Pr. முத்தன் அவர்களோடு இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. சரி செய்யப்படும் தவறுகள் Pr. ஆனந்தகுமாரிடம் காண்பித்து, அதன்பின் Paratext Software-இல் கணினியில் கீ-இன் செய்யப்படும். ஆதியாகமம் 30-ஆம் அதிகாரம் வரை முடிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, படுகா வேதாகமத்தில் 2 அல்லது 3 அதிகாரங்களை நான் வாசித்து, ஒலிப்பதிவு செய்து, அதை 300 படுகா மக்களுக்கு WhatsApp-இல் வாசிப்பதை ஊக்கப்படுத்த அனுப்புகிறேன்.

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மேல் ஹொசஹட்டியிலுள்ள விசுவாசிகளுக்கு மொபைல் மூலமாக உபவாச ஜெபத்தை நடத்துகிறேன். பிரதி சனிக்கிழமைகளில் மேல் ஹொசஹட்டிக்குச் சென்று ஜெபக்கூட்டமும், ஞாயிற்றுக்கிழமைகளில் ஞாயிறு ஆராதனையும் நடத்தப்படுகிறது.

முன்னேற்றப் பணிக்காக சந்தூர், குன்னூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT தாங்குநர்களைச் சந்தித்து, IBT-க்கான காணிக்கை வாங்கி, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். திருமதி. விஜயா, படுகா வேதாகமம் ஒன்று வாங்கினார்கள். திருமதி. ஜெயந்தி சத்திய வார்த்தைப் பத்திரிகைக்கு சந்தா செலுத்தினார்கள். படுகா மொழியில் பதிவு செய்யப்பட்ட புதிய ஏற்பாடு சங்கீதம், நீதிமொழிகள் அடங்கிய கருவிகள் (Audio Devices) விநியோகம் செய்ததற்குரிய தொகை ரூ. 5,200/- பெற்றுக் கொண்டு அலுவலகம் அனுப்பினேன். மேலே கூறப்பட்ட பணிகள் திட்டமிட்டபடி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

<u>மிஷனெரி : சகோ. சம்பத்குமார்</u>

<u>பணித்தளம் : பதர்காம் (ஒடிஷா)</u>

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதத்தில் என் மிஷனெரிப் பணியில் அற்புதமான வழியில்,எ ன் பணித்தளத்தைச் சுற்றி வாழும் மலைவாழ் மக்கள், தெஷியா, மிர்கான் மொழிகளைப் பேசும் மக்களைச் சந்தித்து அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகள், நற்செய்திப் புத்தகங்கள் விநியோகித்து, சுகவீனத்துடன் இருக்கும் மக்கள் சுகம் பெற ஜெபித்தேன். அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிலருக்காகவும் பாரத்துடன் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இப்பணிக்காக தெலிகுடா, கனகுடா, தொங்கச்சுவான், பண்டாரிகுடா, ரஜேரிடா மற்றும் சில கிராமங்களுக்குச் செல்ல கர்த்தர் கிருபை புரிந்தார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஞாயிறு ஆராதனை சிறுவர் வேதாகமப் பள்ளி, உபவாச ஜெபக்கூட்டம், ஆகியன பணித்தள ஆலயத்திலும், வீட்டு ஜெபக்கூட்டங்களும் நடத்தப்படுகிறது. எங்கள் சபை மக்களுக்காகவும் நற்செய்தியைக் கேட்டுவரும் மக்களுக்காகவும் என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



“தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்” [லூக்கா 2:10,11]

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாசகர்கள், IBT தாங்குநர்கள், பங்காளர்கள், ஜெப பங்காளர்கள் அனைவருக்கும் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்களின் கிறிஸ்துமஸ் மற்றும் 2026-ஆம் ஆண்டின் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் (IBT)
நிர்வாகிகள், முழுநேர ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகள்

இதோ சீக்கிரமாய் வருகிறேன்.... ஆயத்தமாயிருங்கள்

மத்தேயு 24

14. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

27. மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.

30. அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.

36. அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.

42. உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.

44. நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

மத்தேயு 25

5. மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லோரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

10. அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

13. மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

31. அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.

வெளிப்படுத்தின விசேஷம் 21

7. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

வெளிப்படுத்தின விசேஷம் 22

11. அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

12. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

20. இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர் : மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.

– தொகுப்பு : **N. ஜார்ஜ் வில்லியம்**

சாயர்புரத்தின் தந்தை
ஜி.யு. போப் (கி.பி. 1820 - 1908)

தமிழகத்திற்கு வந்த மேனாட்டுக் கிறிஸ்தவ மிஷனெரிகளுள் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் ஜி.யு. போப். அவர் தமிழ் சமுதாயத்திற்கும், தமிழ் மொழிக்கும், கிறிஸ்தவ நற்செய்திப் பணிக்கும் ஆற்றியப் பணிகள் மகத்தானவை. இதனால் தமிழ் மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளார். எனினும் தற்போது தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாயர்புரத்து மக்கள் ஒருபடி மேலே சென்று அவரை சாயர்புரத்தின் தந்தை எனப் போற்றுகின்றனர்.

தமிழக அரசு ஜி.யு. போப் அவர்களின் தமிழ் பற்றையும், தமிழ் மொழிக்கு அவர் செய்த அரிய தொண்டையும் கௌரவிக்கும் வகையில் மாண்புமிகு அறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது 2.1.1968-இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, சென்னை மெரினா கடற்கரையில் அவருக்கு சிலை அமைக்கப்பட்டது. அதைத்தான் படத்தில் காண்கிறோம். அப்போதைய பேராயர் வெஸ்லி நியுபிகின் அதை திறந்து வைக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றார். சென்னை மெரினா கடற்கரையில் ஜி.யு. போப் உட்பட மூன்று வெளிநாட்டு அருட்பணியாளர்கள் சிலைகளை அமைத்தார். ஒன்று பேராயர் கால்டுவெல்லின் சிலை. இரண்டாவது ஜி.யு.போப்பின் சிலை. மூன்றாவது பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் என்பவரின் சிலை. அண்ணாவிடம் “உலகத்தமிழ் மாநாட்டுச்சமயம் மூன்று மேனாட்டுக் கிறிஸ்தவர்களுக்குச் சிலைகளா?” என்று கேள்வி கேட்டபோது அவர், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் சிலை வைக்கவில்லை. கால்டுவெல் அயர்லாந்தில் பிறந்தவர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதி தமிழின் முதன்மையை நிறுத்தியவர். ஜி.யு. போப் இங்கிலாந்தில் பிறந்தவர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். தன்னைத் “தமிழ் மாணவன்” என்றழைத்துக் கொண்டவர். பெஸ்கி எனும் வீரமாமுனிவர் இத்தாலியில் பிறந்தவர். தமிழில் புலமை பெற்று தேம்பாவணி எனும் காவியம் படைத்தவர். அவர்கள் மேனாட்டினராயினும் அங்கிருந்து இங்கு வந்து தமிழராகிவிட்டனர். தமிழுக்கு பெருமை சேர்த்தனர். நன்மையானது யாரிடமிருந்து வந்தாலும் பாராட்டுதலுக்குரியவர்களே. ஆகவே அவர்களுக்குச் சிலை வைக்கிறோம்” என்று பதிலளித்தாராம். முன்னாள் தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா தமிழ் அறிஞர்களுக்கு “போப் விருது” ஒன்றை ஏற்படுத்திச் சிறப்பு செய்தார். ஆகவே இப்படிப்பட்ட மாமனிதரை தமிழ்ச்சமுதாயமும் குறிப்பாக கிறிஸ்தவ சமுதாயமும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. ஏனெனில் நம்முடைய சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டும்.

இளமைக்காலம்

ஜி.யு. போப் செல்வச் சிறப்புமிக்க குடும்பத்தில் 1820, ஏப்ரல் 24-ஆம் நாள் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஜான் போப் பாட்டனார் தாமஸ் போப் இவர்கள் இங்கிலாந்தில் பிளைமௌத்தில் சொந்தமாக கப்பலுமிருந்தது. ஜான் போப், ஜான் வெஸ்லி என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட மெதடிஸ்ட் கிறிஸ்தவ சபையில் தீவிர உறுப்பினர். ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவ நற்செய்திப் பணிக்காக வெளியூர் சென்று விடுவது வழக்கம்.

நற்செய்தி அளிப்பதிலும் ஆர்வம் மிக்கவர். ஜியு. போப்பின் தாயார் கேத்தரின் அம்மையார் மிகவும் தேவபக்தியுள்ளவர். பிள்ளைகளையும் தேவபக்தியில் வளர்த்தார். பிள்ளைகளுக்கு அவர்கள் அடிக்கடி சொல்லுகிற காரியம் **“இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி ஒன்றுதான் மக்களின் அவலநிலையை மாற்றமுடியும்”** என்பதுதான். ஜி.யு. போப்பின் தகப்பனார் ஜான் போப்பும், தான். இந்தியாவுக்குச் சென்று இறைப்பணியாற்ற விரும்பியும் போக முடியாத நிலையைக் கூறி வருத்தப்பட்டுள்ளார். இவைகள் போப்பின் பிஞ்சு உள்ளத்தில் பதிவாகிவிட்டன.

ஜி.யு. போப் சிறுவயதிலேயே இந்தியாவுக்கு இறைப்பணி செய்ய விரும்பியதால் இந்திய நாட்டைக் குறித்து அதிகம் அறிய ஆரம்பித்தார். தென்னிந்திய மொழியாகிய தமிழையும் வட இந்திய மொழியாகிய சமஸ்கிருதத்தையும் கற்க ஆரம்பித்தார். இறைப்பணியாற்றும் விருப்பம் சிறுவயது முதலே இருந்தபடியால் வேதாகமத்தை கவனமாகவும் மிகவும் ஆழமாகவும் கற்றார். மேலும் வேதாகமத்தில் மூலமொழித் தொடர்புடைய கிரேக்கம், எபிரேயம், லத்தீன் போன்ற மொழிகளையும் நன்கு பயின்றார். ஆகவே, முழுவேதாகமத்தையும் மாணவ பருவத்திலேயே மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டார். போப் பள்ளிப்படிப்பை முடித்ததைத் தொடர்ந்து கல்லூரிப் படிப்பை ஆகஸ்டன் கல்லூரியில் படித்தார்.

மிஷனெரிப் பணியின் தொடக்கமும், அர்ப்பணிப்பும்

தென் இந்தியாவில் கிறிஸ்தவ மிஷனெரியாகப் பணியாற்ற மெதடிஸ்ட் சபை ஜி.யு. போப்பைத் தேர்ந்தெடுத்தது. அப்பொழுது அவருக்கு வயது 19. அவருடைய தந்தை ஜான் போப்பின் கனவு நனவாகியது. 1839-ஆம் ஆண்டு, நீராவிக் கப்பல் இல்லாத அந்த நாட்களில் பாய் மரக்கப்பலில் எட்டு மாதங்கள் கடற்பயணத்தை முடித்து சென்னை துறைமுகத்தை வந்தடைந்தார். கப்பற் பயணத்தில் கற்றுக் கொள்வதற்கென தமிழ், சமஸ்கிருத புத்தகங்களைக் கூட எடுத்துவந்து ஒரு நாளைக்கு எட்டு மணிநேரம் அவற்றைக் கற்றுக் கொள்ள பயன்படுத்திக் கொண்டார். துறைமுகத்தில் இறங்கும்போதே “கிறிஸ்தவத் தமிழ் நற்செய்தி போதனை” ஒன்றைத் தயாரித்துவிட்டார்.

சென்னை வந்தவுடன் தன்னுடைய பணியை மெதடிஸ்ட் சபையில் ஆரம்பித்தார். முதலாவதாக சென்னை மயிலாப்பூர் சாந்தோம் தேவாலயத்தில், தான் கப்பலில் வரும்போது தயாரித்த அருளுரையை அம்மக்களுக்குப் போதித்தார். இயேசு கிறிஸ்துவின் சீஷனாகிய தோமா, கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கித்த அதே மயிலாப்பூரில், தோமா இரத்த சாட்சியாக மரித்து அடக்கம் பண்ணப்பட்ட அதே இடத்தில் தானும் வந்து நற்செய்திப் பணி செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தமையை எண்ணி மிகவும் பெருமைப்பட்டுள்ளார். சென்னை வந்து போப் முதலில் திருச்சபைகளின் வரலாற்றையும், தமிழ், தெலுங்கு மொழிகளையும் தீர்க்கமாகக் கற்கத் தொடங்கினார். சென்னையில் சூரிய நாராயண சாஸ்திரியிடம் தமிழ் கற்றார். சென்னையில் 1839-இல் மெதடிஸ்ட் குரு அருள்திரு. இராபர்ட் கார்வர் என்பவருக்கு உதவி குருவாக நியமிக்கப்பட்டார். 1841-இல் இராபர்ட் கார்வரின் மகளாகிய ஜேன்மேரி ஆண்டர்சன் என்பவரை திருமணம் செய்தார்.

போப் நீண்டநாட்கள் மெதடிஸ்ட் சபையில் பணியாற்ற முடியவில்லை. அவர் அதிலிருந்து விலகி SPG (Society for the propagation of Gospel) அமைப்பில் சேர்ந்தார். சென்னை பேராயர் 1843-இல் உதவி குருபட்டம் கொடுத்தார். பின்னர் 1845-இல் குருபட்டம் பெற்றார். போப் தமிழ்மொழி இலக்கணங்கள், பக்தி நூல்கள், அறநூல்கள் என எல்லா நூற்களையும் கற்கத் தொடங்கினார். இதற்காகப் போப், புலவர் ஆரியங்காவுப் பிள்ளை மற்றும் இராமானுஜக் கவிராயரிடத்தும் தமிழ்மொழியைக் கற்றார்.

- தொடரும்

கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

1.	வானத்தின் வாசல்	ரூ. 70/-
2.	வானத்தின் மன்னா	ரூ. 70/-
3.	பயப்படாதிருங்கள்	ரூ. 70/-
4.	வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்	ரூ. 60/-
5.	உயிருள்ள உதாரணங்கள்	ரூ. 60/-
6.	பாருக்குள் பரலோகம்	ரூ. 100/-
7.	விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி	ரூ. 100/-
8.	தேவ சத்தம்	ரூ. 100/-
9.	Word of Life (ஆங்கிலம்)	ரூ. 100/-
10.	Word of Life (மலையாளம்)	ரூ. 100/-
11.	Introduction to the Books of the Bible	ரூ. 70/-
12.	Defeat the Despair (ஆங்கிலம்)	ரூ. 100/-
13.	Seeds for the Good Soil (ஆங்கிலம்)	ரூ. 120/-
14.	சத்திய வார்த்தையின் முத்துக்கள்	ரூ. 120/-
15.	இதய கீதங்கள் (பாடல் புத்தகம்)	ரூ. 60/-

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

IBT ஊழியர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதி

நமது ஊழியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மற்றும் கோயா சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் வெகுமதி வழங்க ரூ. 5 லட்சம் நிதி தேவைப்படுகிறது. இது சம்பந்தமாக உங்களில் பலருக்கு IBT பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்கள் மூலமாக கிறிஸ்துமஸ் கவர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துமஸ் “கவர்” பெறாதவர்கள் உங்களது காணிக்கையை ‘கிறிஸ்துமஸ் வெகுமதி’ என்று குறிப்பிட்டு தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலமாகவும் அல்லது கீழே உள்ள QR Code-ஐ Scan செய்தும் உங்கள் கிறிஸ்துமஸ் வெகுமதியை அனுப்பி, ஊழியர்களை ஊக்குவிக்கும்படியாக உங்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

- பொருளாளர்

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. STATE BANK OF INDIA

A/c. No.	:	30008395600
Name	:	Indian Bible Translators
Branch Code	:	7231
Branch	:	Peelamedu
IFS Code	:	SBIN0007231

2. INDIAN BANK

A/c. No.	:	475742259
Name	:	Indian Bible Translators
Branch Code	:	S107
Branch	:	Peelamedu
IFS Code	:	IDIB000S107

SCAN & PAY

Merchant Name : Indian Bible Translators

UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. கடபா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு முடிக்கப்பட்டு பெங்களூரிலுள்ள BSI-க்கு அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இப்பணி தடையின்றி நடக்கவும், தாமதமின்றியும் முடிக்கப்பட்டு, மொழிபெயர்ப்பாளர் சகோ. சுனில்குமார் சபாடிக்கு அனுப்பப்பட ஜெபியுங்கள்.

2. நான்கு மொழியான மிர்கான், கலகாண்டியா, தெஷியா மற்றும் போஜ்புரி மொழிகளில் புனித வேதாகமம் 2028–ஆண்டு நடைபெற திட்டமிடப்பட்டுள்ள IBT லோகோஸ் முகாமில் வெளியிட தீர்மானிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடந்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இது நிறைவேற வேண்டுமெனில், மொழி பெயர்ப்பாளர்கள் கடுமையாக, திட்டமிட்டு செயல்பட வேண்டும். BSI, Wycliffe நிறுவனங்களும் சரிபார்ப்புப் பணிகளை தேவைப்படும் வேளைகளில் மேற்கொண்டு செயல்படுத்த வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.

3. பனியா, தோடா மொழிகளில் வெளியிடப்பட்ட புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் புத்தகங்கள் விநியோகிக்கும் பணிக்கு ஏற்பட்டுள்ள தடைகளை கர்த்தர் மாற்றவும், இதற்குக் காரணமானவர்கள் மனம்மாற்றம் பெறவும், தடையின்றி மீதமுள்ள புத்தகங்கள் அந்த இரு மொழிபேசும் மக்களுக்கு விநியோகிக்கப்படவும் ஜெபியுங்கள்.

4. IBT மொழிபெயர்ப்பாளர்களும், மிஷனெரிகளும் விநியோகிக்கப்பட்ட புத்தகங்கள் பெற்றுக் கொண்டவர்களை மீண்டும் சந்தித்து, அதைக்குறித்து கலந்தாலோசிப்பதற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். IBT-இன் அனைத்து மிஷனெரிகள், மொழிபெயர்ப்பாளர்கள் இப்பணியை செய்து, வாசிப்பவர்களுக்கு புரியும்படியாக எடுத்துக்கூறவும், படிக்கத் தெரியாத மக்களுக்கு எழுத்தறிவுப் பணியை மேற்கொள்ளவும் ஜெபிப்போம்.

5. IBT மூலமாகத் தெரிவு செய்யப்பட்டு, இதுவரை மொழிபெயர்ப்பு ஆரம்பிக்கப்படாத 16 மொழிகளுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் கிடைக்கவும், அம்மொழிகள் பேசும் மக்களும் இயேசு கிறிஸ்துவை அறியும் மேலான கிருபை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

SEND ALL YOUR CONTRIBUTIONS

Cheques / DD / M.O. to

INDIAN BIBLE TRANSLATORS

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Phone : 0422 - 4520143

WhatsApp & Mobile : 90470 57414

E-mail : indianbibletranslators@gmail.com

Web : www.ibtword.com

சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/–

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

WORD PUBLISHERS TRUST

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Editor & Published by On behalf of	**Mr. K. JAISINGH** **WORD PUBLISHERS TRUST** 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Printed by	**Mr. C.K. VENKATESH** Chandra Prabha Press 113-118, V.H. Road, CBE-1.

வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

தொடர்பு எண். 90470 57414.

BANK DETAILS

CENTRAL BANK OF INDIA

A/c. No. : 1630413107

Name : Word Publishers Trust

Branch : Kalapatti

IFS Code : CBINO282057

SCAN & PAY

Address :

WORD PUBLISHERS TRUST

14, Ashok Layout,

Civil Aerodrome Road,

Coimbatore - 641 014.

SATHTHIYA VAARTHAI - TAMIL

Date of Publishing : 2nd & 3rd December 2025

Postal Regd. No. **CB/052/2024-26**

Licensed to Post without Prepayment No.

TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)

RNI No. 82166